## மாநில உரிமைகளை, மொழி உரிமைகளை, சம உரிமைகளைக் காக்க

# மக்களுடன் மக்களாகக் களத்தில் நிற்கும் போராட்ட உணர்ச்சியை நமக்கெல்லாம் ஊட்டிய தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர்!

## திருவண்ணாமலை – கலைஞர் சிலை திறப்பு விழாவில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழுரை!

**திருவண்ணாமலை, டிச.6-**

**திருவண்ணாமலை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவச்சிலையை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து, இருவண்ணக் கொடியேற்றி சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``மாநில உரிமைகளை, மொழி உரிமைகளை, சம உரிமைகளைக் காக்க நம் கழகம் என்றைக்கும் மக்களுடன், மக்களாகக் களத்தில் நிற்கும். அந்த போராட்ட உணர்ச்சியை நமக்கெல்லாம் ஊட்டிய தலைவர்தான் இங்கு நமக்கு முன்பு சிலையாக நிற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.” என்று குறிப்பிட்டார்.**

இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:





இன்றைக்கு ஆரணியில் மிகுந்த எழுச்சியோடு, கலைஞர் சிலை திறப்பு விழா, கருப்பு சிவப்பு கொடியேற்றும் விழா நிகழ்ச்சி இரண்டும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உங்களுடன் சேர்ந்து, உங்களின் முன்னிலையில் கலைஞரின் சிலையைத் திறந்து வைப்பதிலும், கழகத்தின் கொடியை ஏற்றுவதிலும் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

### சிறப்பான வரவேற்பு!

இது வெறும் சிலை திறப்பு விழாவா, கொடியேற்றும் விழாவா அல்லது சிறிய மாவட்ட, மண்டல, மாநாடா என்று நினைக்கின்ற அளவுக்கு மிகுந்த எழுச்சியுடன் ஆயிரக்கணக்கானோர், ஆரணி மக்கள் இன்று கூடியிருக்கிறீர்கள். முதலில் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும், திருவண்ணாமலை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தரணிவேந்தன் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும், சிறப்பான வரவேற்பை அளித்த கழகத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும், தொ.மு.சவை சேர்ந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது வாழ்த்துகளையும், நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞரின் சிலை திறப்பு, கொடியேற்றும் விழா. இந்த இரண்டு நிகழ்ச்சியும் ஊர் கூடி நடத்துகிற ஒரு திருவிழா மாதிரி, இந்த ஆரணிப் பகுதியில் இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

பட்டு நெசவுக்கும், விவசாயத்துக்கும் புகழ் பெற்ற ஊர்தான் இந்த ஆரணி. நெசவாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் எண்ணற்றத் திட்டங்களைத் தந்தவர்தான் நம் கலைஞர் அவர்கள். அந்த உணர்வுடன் தான், இன்றைக்கு கலைஞர் சிலை திறப்பு விழாவில், ஆயிரக்கணக்கில் இந்த ஆரணி மக்கள் இங்கு கூடியிருக்கிறீர்கள்.

### மூன்றாவது கலைஞர் சிலை!

கலைஞருக்கு நன்றி செலுத்துகிற வகையில்தான், இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இந்த திருவண்ணாமலை மாவட்டத்தில் நான் திறந்து வைக்கின்ற மூன்றாவது கலைஞர் சிலை இது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூரில் முதன்முதலாக கலைஞரின் சிலையை திறந்து வைத்தேன். சில மாதங்களுக்கு முன்பு செங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் சிலையை திறந்து வைக்கின்ற வாய்ப்பையும் பெற்றேன். இப்படி தமிழ்நாடு முழுவதும், கலைஞரின் சிலையை நாம் திறந்து வைத்திருக்கிறோம். இது கொண்டாட்டத்துக்காக நடத்தப்படுகின்ற சிலை திறப்பு நிகழ்ச்சி கிடையாது. கலைஞரின் கொள்கைகளை, சாதனைகளை, புகழை பட்டித்தொட்டி எங்கும் கொண்டு சேர்க்கின்ற நிகழ்வாகத்தான் இந்த நிகழ்ச்சியைப் பார்க்கிறேன்.

### கழகத்தின் கோட்டை!

இந்த திருவண்ணாமலை மாவட்டம் இன்று, நேற்றல்ல. கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து கழகத்தின் கோட்டை என்று சொல்லப்படுகிற மாவட்டம்தான், இந்த திருவண்ணாமலை மாவட்டம். அதற்கு காரணம் இந்த மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் படைவீரர்களாக இங்கு ஏராளமானோர் கழகப்பணி ஆற்றியுள்ளார்கள்.

உதாரணத்துக்கு கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து கடுமையாக உழைத்து, இந்தப் பகுதியில் கட்சியை வளர்த்த பெரியவர் போளூர் சுப்பிர மணியம் அவர்கள் இருக்கிறார். 1963ஆம் ஆண்டு திருவண்ணாமலை இடைத்தேர்தலில் வென்று மிகப்பெரிய வரலாற்றுச் சாதனைப் படைத்த கலைஞரின் உற்ற தோழன் ப.வு.சண்முகம் அவர்கள். இதே ஆரணி நகரில் சைக்கிளில் சுற்றி, சுற்றி வந்து கழகப்பணி ஆற்றிய முன்னாள் ஆரணி நகரச் செயலாளர் மறைந்த ஆரணி செல்வராசு அவர்கள் என்று இப்படி மூன்று பேர் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான செயல்வீரர்களின் உழைப்பால், இந்த மாவட்டத்தில் நம் கழகம் உயர்ந்திருக்கிறது.

இன்று கலைஞரின் சிலையை நாம் திறந்து வைத்திருக்கிறோம் என்றால், இந்த சிலை ஏதோ ஒரு உருவம் மட்டுமல்ல, இந்த மாவட்டத்தில் இருக்கின்ற இலட்சக்கணக்கான உடன்பிறப்புகளின் ஒட்டு மொத்த உருவமாகத்தான் இன்றைக்கு இந்த சிலையை நாம் திறக்கிறோம்.

### பல அணிகள்!

கழகத்தின் செல்வாக்கு, கலைஞரின் செல்வாக்கு, உதயசூரியன் சின்னத்தின் செல்வாக்கு இந்த ஆரணியில் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே செல்கிறது. ஆரணிக் கழக நிர்வாகிகளும், பொதுமக்களும் ஓரணியில் நிற்கிறோம். ஆனால், நமக்கு எதிரே நிற்கிற அ.தி.மு.கவைப் பார்த்தீர்கள் என்றால், எத்தனை அணியில் நிற்கிறார்கள் என்று யாருக்குமே தெரியாது. பல அணிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள்.

பல்வேறு அணிகளாக அவர்கள் பிரிந்து நின்றாலும், அவர்களுக்குள் அந்த கட்சியை யார் கைப்பற்றப் போகிறார்கள் என்ற போட்டியில்தான் அத்தனை அணிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள். எடப்பாடி பழனிசாமியை எப்படி தோற்கடிக்கலாம் என்று ஒவ்வொரு அணியும் அ.தி.மு.கவில் போட்டிப் போட்டுக்கொண்டு வேலை பார்க்கிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களுக்கும், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் எடப்பாடி பழனிச்சாமி துரோகம் செய்துள்ளார். அமித்ஷாவின் காலடியில் யார் முதலில் விழலாம் என்று அ.தி.மு.கவில் உள்ள அணிகளுக்குள் ஒரு போட்டியே நடந்துகொண்டு இருக்கிறது. ஆனால், என்றைக்கும் பாசிச பா.ஜ.கவையும், அதன் அடிமை அ.தி.மு.கவையும் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் ஏற்றுக்கொள்ளப்போவது கிடையாது.

வெறும் வெறுப்புப் பிரச்சாரத்தை மட்டும் செய்கின்ற ஒன்றிய பாசிச பா.ஜ.கவுடன் அ.தி.மு.க. கூட்டணி வைத்துள்ளது. அந்தக் கூட்டணி அமைந்து 8 மாதங்கள் முடிந்துள்ளன. ஆனால், ஒரு இயக்கம்கூட அந்தக் கூட்டணியை நம்பி அங்கு செல்லவில்லை.

எடப்பாடி பழனிசாமி அவர்கள் 8 மாதங்களுக்கு முன்பு பிரச்சாரத்துக்குச் செல்கிறேன் என்று சொல்லி பேருந்தை எடுத்துக்கொண்டு கிளம்பினார். அந்தப் பேருந்தில் சென்று, ஒவ்வொரு தொகுதியாகப் பிரச்சாரம் செய்வார் என்று பார்த்தால், ஒவ்வொரு தொகுதியாகச் சென்று அ.தி.மு.கவில் இருப்பவர்களையே அவர் திட்டிக்கொண்டு இருக்கிறார்.

உதாரணத்துக்கு, தேனி பக்கம் சென்றால் ஓ.பி.எஸ்சை திட்டுவார், கோபிக்கு சென்றால் செங்கோட்டையனைத் திட்டுவார், டெல்டா பகுதிக்கு சென்றால், டி.டி.வி தினகரனை திட்டுவார். இப்படித்தான் எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரம் சென்று கொண்டிருக்கிறது.

ஆனால், ஒரேயொரு விசயத்தில் மட்டும் தான் அ.தி.மு.க அணிக்குள் ஒற்றுமை இருக்கிறது. அமித்ஷாவை யார் அதிகமாகப் பாராட்டிப் பேசுகிறார்கள் என்ற ஒற்றுமை மட்டும்தான், அ.தி.மு.கவில் இருக்கின்ற ஒரே ஒற்றுமை. சொந்தக் கட்சிக்காரர்களைத் திட்டிவிட்டு, இன்றைக்கு அமித்ஷாவின் காலைப் பிடித்துக்கொண்டு அவரைப் புகழ்ந்துகொண்டிருக்கிறார்.

### பா.ஜ.க.வின் திட்டம்!

பா.ஜ.கவைப் பொறுத்தவரைக்கும் நாடு முழுவதும் ஒரே கட்சி இருக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் கொள்கை. ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கட்சி. இதுதான் பா.ஜ.கவின் திட்டம்.

இன்றைக்கு அப்பேற்பட்ட ஒன்றிய அரசை எதிர்த்து, கேள்வி கேட்கக்கூடிய ஒரே தலைவராக நம் தலைவரும், ஒரே இயக்கமாக நம் திராவிட முன்னேற்றக் கழகமும் களத்தில் தைரியமாக நாம் எதிர்த்து நிற்கிறோம்.

மாநில உரிமைகளை, மொழி உரிமைகளை, சம உரிமைகளைக் காக்க நம் கழகம் என்றைக்கும் மக்களுடன், மக்களாகக் களத்தில் நிற்கும். அந்த போராட்ட உணர்ச்சியை நமக்கெல்லாம் ஊட்டிய தலைவர்தான் இங்கு நமக்கு முன்பு சிலையாக நிற்கும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். கலைஞர் காட்டிய வழியில்தான், இன்றைக்கும் நம் கழகத் தலைவர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியை சிறப்பாக நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

### சிறந்த முதலமைச்சர்!

இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக நம் தலைவர் அவர்களும், இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக நம் தமிழ்நாடும் விளங்குகிறது என்றால், நம் முதலமைச்சர் நான்கு வருடத்தில் கொண்டு வந்துள்ள திட்டங்கள்தான் காரணம். ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து நம் தலைவர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். அனைத்து மாவட்டங்களுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளையும் பெருக்கிக்கொண்டு வருகிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற மக்கள் செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்றுதான், இன்றைக்கு ஒன்றிய அரசு பல்வேறு வகைகளில் நெருக்கடிகளைக் கொடுக்கிறது.

தமிழ்நாட்டுக்கு வேண்டுமென்றே நிதிச் சுமையை ஏற்றிக்கொண்டு இருக்கிறார்கள். 100 நாள் வேலை திட்டத்துக்கான நிதியை கொடுப்பதில்லை. கல்விக்கான நிதியைப் பறிக்கிறார்கள். புதிய இரயில்வே திட்டம் கேட்டால் அதையும் கொடுப்பதில்லை. நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் பா.ஜ.கவை ஏற்க மாட்டார்கள் என்று தெரிந்து ஒன்றிய பா.ஜ.க தமிழ்நாட்டை வஞ்சித்துக்கொண்டு இருக்கிறது.

வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்து நம் முதலமைச்சர் அவர்கள் திட்டங்களைத் தீட்டுகிறார். எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் திராவிட மாடல் அரசை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

இந்த ஆரணியில் மட்டும் கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு கைத்தறி பட்டுப் பூங்கா அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இதன் மூலம் 10 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் விரைவில் பயன்பெற இருக்கிறார்கள்.

ஆரணியில் இருக்கக்கூடிய மிகப்பெரிய சூரியகுளம் 5 கோடியே 80 லட்சம் ரூபாயில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. அந்தப் பணிகளும் விரைவில் முடிய இருக்கின்றன. இன்னும் இப்படி நிறைய திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

### 11 கோடி பயணங்கள்!

மகளிர் விடியல் பயணத் திட்டம் (இலவசப் பேருந்துப் பயணம்), கிட்டத்தட்ட நான்கரை வருடத்தில் மட்டும் 850 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 11 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிக் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் ஒவ்வொரு நாளும் 85,000 குழந்தைகள் அந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

அதேமாதிரி கல்லூரி செல்லும் மாணவ மாணவிகளுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம். இந்த திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 33,000 மாணவ, மாணவிகள் ஒவ்வொரு வருடமும் இந்தத் தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட ஒரு கோடியே 20 இலட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். இந்த திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 4 லட்சத்து 15 ஆயிரம் மகளிருக்கு மாதந்தோறும், கடந்த 27 மாதங்களாக 27,000 ரூபாயை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

அரசின் திட்டங்கள் மூலம் மக்கள் நலப் பணிகளையும், பாசிச பா.ஜ.கவுக்கு எதிரான போராட்டங்கள் மூலம் தமிழ்நாட்டின் உரிமைகளையும் காக்கும் பணியையும் இன்றைக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமும் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறது.

### நமக்கு ஒரு இலக்கு

இவற்றையெல்லாம் நமக்கு ஒரு அரசியல் பாடமாக சொல்லிக் கொடுத்தவர்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட கலைஞரின் வழியில், தலைவரின் வழிகாட்டலில் நாம் அத்தனைபேரும் இன்றிலிருந்து அடுத்த நான்கு மாதங்கள் அயராது உழைக்க வேண்டும்.

தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்திருக்கிறார்கள். வருகின்ற 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், நிச்சயம் நம்முடைய தலைவர் மீண்டும் முதலமைச்சராக உட்காரப் போவது உறுதி. குறைந்தது 200 தொகுதிகளில் தி.மு.க கூட்டணி வெற்றிபெறும் என்று தலைவர் சொல்லியிருக்கிறார்.

அதற்கு நாம் வருகின்ற அடுத்த நான்கு மாதமும் களத்தில் இறங்கி மக்களைச் சந்தித்து, நம் அரசின் திட்டங்களை ஞாபகப்படுத்தி, அந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் எடுத்துச்சென்று சேர்க்க வேண்டும். நம்முடைய கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெற வேண்டும். அதில் ஆரணி உட்பட திருவண்ணாமலையில் இருக்கக்கூடிய அனைத்துத் தொகுதியிலும் உதயசூரியன் நிச்சயம் உதிக்க வேண்டும். நம் கூட்டணி கட்சிகள் வெற்றிப்பெற வேண்டும். அதுதான் நம் ஒவ்வொருவரின் எண்ணமாக, செயல் திட்டமாக இருக்க வேண்டும்.

ஏழாவது முறையாகக் கழகம் ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், நம் தலைவர் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலில் உட்கார வேண்டும் என்றால், அந்த வெற்றி இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகள் உங்களின் கைகளில், உங்களின் உழைப்பில் இருக்கிறது.

எனவே கலைஞர் புகழ் வாழ்க! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்று சொல்லி, இந்த சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாவட்டக் கழக நிர்வாகத்துக்கும், மாவட்ட அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும், இந்த சிறப்பான வரவேற்பு அளித்து, வந்திருக்கக்கூடிய கழகத்தின் உடன்பிறப்புகள் உங்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர் எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன், கணேசன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் அன்பழகன், சுந்தர், துரை மாமது, மோகன், ராஜ்குமார், நகரப் பொறுப்பாளர் மணிமாறன், பேரூர் கழகச் செயலாளர் கோவர்த்தன், நகர மன்றத் தலைவர் ஏ.சி.மணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ரஞ்சித், குமரவேல், ராம்மோகன், வெங்கடேசன், புருஷோத்தமன், கலாம் பாட்சா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் விஜயகுமார் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.